பக்கங்கள் 17

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 06 புதன்கிழமை 22.11.2023 அதிர்வு 114

## ஒத்துழைப்பு வழங்குங்கள்

### சபையில் எதிரணியிடம் ஜனாதிபதி கோரிக்கை

“ஆட்சியாளர்களுக்கு எதிராக நீதிமன்றத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கும் சூழலை நானே தோற்றுவித்தேன். ஆகவே, எனக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்.” 04



## அடுத்த ஆண்டு இரு தேர்தல்கள்

### மீண்டும் உறுதிப்படுத்தினார் ரணில்

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் அடுத்த வருடம் நிச்சயம் நடத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று, 2024 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். 04

## நமக்காகப் போராடியவர்களை நாம் கௌரவிக்கும் வாரம் இது

### நாடாளுமன்றில் சுமந்திரன் தெரிவிப்பு

“எங்களுக்கு இது ஒரு முக்கியமான வாரம். எங்களுக்காகப் போராடி மடிந்தவர்களை நாங்கள் கௌரவித்து வணங்கும் வாரம் இது.”

- இவ்வாறு இன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

இன்று நாடாளுமன்றத்தில் அவர் ஆங்கிலத்தில் ஆற்றிய உரையில் மாவீரர் வாரம் குறித்து அவர் குறிப்பிட்ட விடயங்கள் வருமாறு:-

“இது ஒரு முக்கியமான வாரம். எங்களுக்காகப் போராடியவர்களுக்காக நாம் அவர்களை கௌரவிக்கும் வாரம் இது. அந்தவகையில் அதை வெளிப்படுத்துவதற்கு நான் தயங்க மாட்டேன்.

ஏன் அவர்கள் எங்களுக்காகப் போராடினார்கள்? ஏனென்றால் தேசிய நீரோட்டத்தில் இருந்து - வாழ்க்கையில் இருந்து - (உங்களால்) நாம் தூக்கி வீசப்பட்டோம். 04




## அலெக்ஸின் மரணம் தொடர்பில் நீதியான விசாரணை வேண்டும்

### இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் வலியுறுத்து

- எஸ்.நிதர்ஷன் -



யாழ்ப்பாணம் – வட்டுக்கோட்டையில் பொலிஸ் காவலில் வைத்து மோசமாகத் தாக்கப்பட்ட நாகராசா அலெக்ஸ் என்ற 26 வயது இளைஞர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் சுவிட்சர்லாந்து கவலை வெளியிட்டுள்ளது.

இளைஞரின் மரணம் குறித்து சுவிட்சர்லாந்து ஆழ்ந்த கவலையில் இருக்கின்றது என்று இலங்கைக்கான 04

## முடிந்தால் தேர்தலை நடத்துங்கள்

### சபையில் சஜித் சவால்

225 பேரின் வாக்குகளை விட நாட்டு மக்களின் சர்வஜன வாக்குரிமை மதிப்புமிக்கது என்றும், 220 இலட்சம் பேரினதும் ஆணை கிடைக்க வேண்டும் என்ற விருப்பம் ஜனாதிபதிக்கு 04

## மின்சார வேலியில் சிக்குண்டு கொம்பன் யானை உயிரிழப்பு

- எஸ்.நிதர்ஷன் -

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் – பெரிய சாளம்பன் கிராமத்தில் வயல் நிலத்தின் பாதுகாப்புக்குப் போடப்பட்ட மின்சார வேலியில் சிக்குண்டு கொம்பன் யானை ஒன்று உயிரிழந்துள்ளது

இந்தச் சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது. 04

VIDEO

## யாழ். சிறைக்கு நேரில் சென்று விசாரணை நடத்திய நீதிவான்



- எஸ்.நிதர்ஷன் -

வட்டுக்கோட்டை இளைஞர் படுகொலை தொடர்பில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிவான் சிறைச்சாலைக்கு நேரில் சென்று 04

# 4 ஆயிரத்து 500 ஏக்கர் காணியை அபகரித்துள்ளார் பௌத்த மத குரு!

## சுற்றாடல் நீதி மையம் வழக்குத் தாக்கல்!!

சுமார் 4,500 ஏக்கர் காணியை பௌத்த மதகுரு ஒருவர் பலவந்தமாகக் கைப்பற்றியுள்ளார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வலத்தவே ராகுல என்ற பௌத்த மதகுருவே இவ்வாறு பலவந்தமாகக் காணியைக் கைப்பற்றியுள்ளார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அனுராதபுரம் மாகோல்லாகம பிரதேசத்தில் அமைந்துள்ள காட்டுப் பகுதி ஒன்றை இவ்வாறு பௌத்த மதகுரு பலவந்தமாக கைப்பற்றியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த காட்டுப் பகுதியில் அந்த மதகுருவால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை உடன் நிறுத்துமாறு உச்ச நீதிமன்றம் வன விலங்கு திணைக் களத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

அந்த பகுதியில் அமைக்கப்பட்டுள்ள யானைகளுக்கு எதிரான வேலிகள் காரணமாக வனவிலங்குகள் மற்றும் பிரதேச மக்கள் பாதிக்கப்படுகின்றனர் எனவும் யானைகளைத் தடுக்கும் மின்சார வேலிகளை அகற்றுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

சுற்றாடல் நீதி மையம் உள்ளிட்ட சில தரப்பினரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை பரிசீலனை செய்த நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

# பூச்சிக்கொல்லி மருந்தை அருந்திவிட்டு பாடசாலை சென்ற மாணவனால் பதற்றம்!

பூச்சிக்கொல்லி மருந்தை அருந்தி விட்டு பாடசாலைக்கு சென்ற மாணவர் ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

ஹட்டன் வலயக் கல்வி அலுவலகத்தின் கீழ் இயங்கும் தமிழ் பாடசாலை ஒன்றில் 10ஆம் ஆண்டில் கல்வி கற்கும் 16 வயதுடைய மாணவன் ஒருவரே நேற்று (21) இவ்வாறு வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதனால் பாடசாலையில் பதற்றம் நிலவியுள்ளது.

இந்த மாணவன் கல்வி கற்கும் பாடசாலையின் ஆசிரியர்கள் பலர், தன்னையும், தனது சகோதரியையும் தொடர்ந்து திட்டியதால் இந்த முடிவை எடுத்துள்ளார் என்று அந்த மாணவன் கூறியுள்ளார்.

இதன் காரணமாக மரக்கறிச் செய்கைக்குப் பயன்படும் பூச்சிக் கொல்லி மருந்தை அருந்திவிட்டுப் பாடசாலைக் குச் சென்றுள்ளார். இதை அறிந்த சக மாணவர்கள் ஆசிரியர்களிடம் தெரி வித்துள்ளனர். இதன் பின்னர் மாண வன் வட்டவளை பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் என்றும் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பேராதனை பஸ் நிலையப் பகுதியில் மண் மேடு விழுந்ததில் ஒருவர் பலி!



பேராதனை பஸ் நிலையத்துக்கு அருகில் மண் மேடு சரிந்து விழுந் ததில் கடையிலிருந்த நபர் ஒருவர் உயிரிழந் துள்ளார்.

நேற்று (21) இரவு பெய்த அடை மழை கார ணமாக கொழும்பு செல் லும் பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள மண் மேட்டின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்துள்ளது.

அருகில் இருந்த 4 கடைகள் மண்மேட்டின் கீழ் புதைந்துள்ளன என்று பொலிஸார் தெரி வித்துள்ளார்.

அந்த இடத்துக்கு அருகில் உள்ள அறையில் தங்கியிருந்த பேராதனை பிரதேசத்தை சேர்ந்த 68 வயதுடைய நபரே இவ்வாறு உயிரி ழந்துள்ளார்.

மண்மேடு சரிந்து விழுந்ததில் காணாமல் போன நபரை கண்டுபிடிக்க மின்சார சபை அதிகாரிகள், தீயணைப்பு துறையினர், அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் மற்றும் பிரதேச வாசிகளின் உதவியுடன் நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டது.

அதற்கமைய, இன்று (22) அதி காலை காணாமல் போனவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்த மண் மேடு சரிந்ததால் சாலையில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படவில்லை என்று தெரிவிக்கப் படுகின்றது.





# கனடாவில் பிராம்டன் நகர முதல்வர் பிரவுன் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி மரியாதை!

புலம்பெயர் ஈழத் தமிழ் சமூகம் அதிகளவில் வாழும் கனடாவில் பிராம்டன் நகர மண்டபத்தில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்பட்ட வரலாற்று நிகழ்வு நேற்று இடம்பெற்றுள்ளது.

பிராம்டன் நகர முதல்வர் பேட்ரிக் பிரவுன் நேற்றுக் காலை 8.30 மணிக்கு தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி மரியாதை செய்து இந்த வரலாற்று நிகழ்வை செய்துள்ளார்.

பிரம்டன் நகர சபை வளாகத்தில் தமிழீழ தேசியக்கொடி ஏற்றப்பட்ட முதல் சந்தர்ப்பமாகவும் இது பதிவாகியுள்ளது.

தமிழீழத் தேசியக் கொடியை உலகின் அங்கீகாரத்துக்கு எடுத்துச் செல்லும் முதற்படியாக இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது. தமிழீழத் தேசியக் கொடி தினத்தை முன்னிறுத்தி இந்த நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து பேட்ரிக் பிரவுன் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்ததாவது, இன்று நாம் அனைவரும் தமிழீழத் தேசியக் கொடி அறிமுகப்படுத்தப்பட்ட



33 ஆம் ஆண்டு நிறைவை மரியாதை செலுத்தும் முகமாக பிரம்டன் நகர மண்டபத்தில் ஒன்று கூடினோம்.

இன்று மட்டுமல்ல ஒவ்வொரு நாளும், நாங்கள் கனடாவாழ் ஈழத் தமிழர்களின் எழுச்சியையும், பிரம்டன் மற்றும் கனடா முழுவதுமான எமது சமூகங்கள் அனைத்தையும் வளப்படுத்துவதில் அவர்கள் ஆற்றிவரும் பங்களிப்பையும் கொண்டாடுவோம்.

ஈழத் தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பையும் மனித உரிமை மீறல்களையும் தொடர்ந்து கொண்டிருக்கும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பையும் ஒரு போதும் மறக்கமாட்டோம். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு தனியார் வகுப்புகளுக்குத் தடை!

## ஊவா மாகாணத்தில் சுற்று நிருபம் மூலம் அறிவிப்பு

ஊவா மாகாணத்தில் தரம் ஒன்று முதல் தரம் 5 வரையிலான மாணவர்களுக்கு வார இறுதி நாள்களிலும் விடுமுறை நாள்களிலும் தனியார் வகுப்புகளை நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் நேரத்தின் பின்னர் கட்டணம் அறவீடு செய்து நடத்தப்படும் மேலதிக வகுப்புகள் முழுமையாக தடை செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுற்று நிரூபம் ஒன்றின் மூலம் இந்த தடை அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மாகாண கல்வி அமைச்சு, வலயக் கல்வி பணிமனை, அதிபர்கள் உள்ளிட்டோருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த விதிமுறைகளை மீறும் ஆசிரியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவ



டிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலதிக நேர வகுப்புகள் நடத்தப்படுகின்றதா என கண்டறிந்து கொள்வதற்காக விசாரணை குழுக்கள் கடமையில் அமர்த்தப்படவுள்ளன.

ஆசிரியர்களால் நடத்தப்படும் தனியார் வகுப்புகளுக்குச் சமூகமளிக்காத மாணவர்களை ஆசிரியர்கள் உதாசீனம் செய்வதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டைத் தொடர்ந்து தனியார் வகுப்புகளை நடத்துவதற்கு முழு அளவில் தடை விதிக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மாகாண ஆளுநர் உள்ளிட்டோர் செய்திருந்த முறைப்பாட்டை தொடர்ந்து இந்த தீர்மானத்தை கல்வி அமைச்சு எடுத்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### யாழ். சிறைக்கு...

வாக்குமூலங்களைப் பெற்றுக்கொண்டார்.

அதேவேளை, உயிரிழந்த இளைஞருடன் கைது செய்யப்பட்ட மற்றைய இளைஞரிடமும் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காக நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மன்றில் முன்னிலையாகுமாறு அந்த இளைஞருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞர் பொலிஸாரின் சித்திரவதை காரணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இளைஞரின் உயிரிழப்பு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் இடம்பெற்றமையால் இளைஞரின் உயிரிழப்பு தொடர்பான விசாரணைகள் யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ ஆனந்தராஜா முன்னிலையில் இடம்பெற்று வருகின்றன.

இளைஞரின் உடற்கூற்று பரிசோதனைகள் நேற்றுமுன்தினம் மதியம் யாழ்.போதனா வைத்தியசாலையில்சட்ட வைத்திய அதிகாரி உ.மயூரதன் மேற்கொண்டபோது நீதிவான் வைத்தியசாலைக்கு நேரில் சென்று சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிசோதனைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

தொடர்ந்து சிறைச்சாலைக்கும் அவர் நேரில் சென்று சிறைச்சாலை அத்தியட்சகர், உத்தியோகஸ்தர்கள் , உள்ளிட்டவர்களிடம் வாக்குமூலங்களையும் பெற்றுக்கொண்டார்.

உயிரிழந்த இளைஞரின் குடும்பத்தினர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி வி. திருக்குமரன், சட்டத்தரணி ரிஷிகேஷவன், மற்றும் சட்டத்தரணி மயூரன் ஆகியோர் முன்னிலையாகி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, உயிரிழந்த இளைஞருடன் கைதான மற்றைய இளைஞர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்ட நிலையில் நீதிமன்றால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

உயிரிழந்த இளைஞர் மற்றும் அவரது நண்பரான மற்றைய இளைஞர் ஆகியோர் மீது நகைத் திருட்டு குற்றச்சாட்டு சுமத்தி வட்டுக்கோட்டை பொலிஸாரினால் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது இருவரையும் மன்று விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதைத் தொடர்ந்து இருவரும் யாழ்ப்பாணம் சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையிலே அலெக்ஸ் எனும் இளைஞர் உயிரிழந்தார். மற்றைய இளைஞர் தொடர்ந்து சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலே நேற்று நீதிமன்றம் அவரைப் பிணையில் செல்ல அனுமதித்தது.

### மின்சார வேலியில்...

சுமார்15வயதுமதிக்கத்தக்கயானையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

யானையின் உயிரிழப்பு தொடர்பில் பொலிஸார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை ஆரம்பித்தனர்.

மின்சார வேலியை இணைப்புச் செய்த காணியின் உரிமையாளர் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

இதேவேளை, சாளம்பன் கிராமத்தில் காட்டு யானைகளால் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வருகின்றது அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

தங்கள் கிராமத்துக்கான யானை வேலி இதுவரை அமைத்துக் கொடுக்கப்படவில்லை என்றும், இதனால் தொடர்ச்சியாக விவசாய நிலங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன என்றும், காட்டு யானைகளால் உயிர் அச்சுறுத்தல் உள்ளது என்றும் அவர்கள் மேலும் குறிப்பிட்டனர்.

### ஒத்துழைப்பு வழங்குங்கள்...

– இவ்வாறு எதிர்க்கட்சிகளிடம் வேண்டுகோள் விடுத்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

“நெருக்கடியான சூழலின் போது நாட்டைப் பொறுப்பேற்றதால் என் வீடு தீக்கிரையாக்கப்பட்டது. நாட்டு மக்களின் நம்பிக்கையை முதலில் உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்” – என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

### அடுத்த ஆண்டு...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வரவு – செலவுத் திட்டத்துக்கு (இரண்டாம் வாசிப்பு) ஆதரவாக வாக்களித்த 122 எம்.பிக்களுக்கும் நன்றிகள். அவர்களின் ஒத்துழைப்பு தேவை. அத்துடன், எதிராக வாக்களித்த உறுப்பினர்களுக்கும் நன்றி கூற வேண்டும். ஏனெனில் எதிரணிக்கு நாடாளுமன்றத்தில் ஆதரவு இல்லை என்பது தெளிவாகியுள்ளது.

அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலும், நாடாளுமன்றத் தேர்தலும் நடத்தப்படும். அதன்பின்னர் ஏனைய தேர்தல்கள் நடத்தப்படும். தேர்தல்களை ஒத்திவைக்கும் திட்டம் இல்லை.” – என்றார்.

### அலெக்ஸின் மரணம்...

சுவிட்சர்லாந்து தூதுவர் சிறி வால்ட் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் காவலில் தவறாக நடத்தப்பட்டதாகக் கூறப்படும் எந்தவொரு வழக்கும் இலங்கை அதிகாரிகளால் பாரபட்சமின்றி விசாரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

### முடிந்தால் தேர்தலை...

இருந்தால் முதலில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

2019 ஜனாதிபதித் தேர்தல் மற்றும் 2020 பொதுத் தேர்தல் ஆணைகளுக்கு மாறாக நாட்டு மக்களின் உண்மையான ஜனநாயகமே இப்போது முக்கியமானது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“உயர் நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள வழக்கு எண்ணைத் தவறுதலாகக் குறிப்பிடும் போது அதன் உள்ளடக்கத்தைப் பற்றி சிந்திக்காமல் வழக்கு எண்ணை வைத்துக் கொண்டு நாடாளுமன்றத்தில் கூறுவது வெட்கக்கேடானது. வழக்கு எண் மாறினாலும், நாட்டையே வங்குரோத்தாக்கியவர்களின் பெயர்கள் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியை நியமித்த 134 பேருக்கும் சரியாக ஒன்றை வாசித்துப் புரிந்துகொள்ள முடியாது என்றாலும், அதனை வாசித்துப் புரிந்துகொள்ளும் திறன் ஜனாதிபதிக்கு இருந்தாலும், ஜனாதிபதியை நியமித்த 134 பேருக்கும் முட்டாள்தனமான திருப்தியை வழங்க அதே காரணத்தை பிடித்துக் கொண்டு கூச்சலிட்டமை வருந்தக்க விடயம்.

தற்போதைய ஜனாதிபதி பிரதமராக இருந்தபோது ‘மஹிந்த திருடன் எமக்கு வேண்டாம்’ எனக் கூறி கத்தினாலும், திருடன் என்று அழைத்த நபருடன் பிறந்த நாள் கேக் வெட்ட ஜனாதிபதி சென்றார்.

ஜனாதிபதி தற்போது மக்கள் அபிப்பிராயம், மக்கள் ஆணையை புறம் தள்ளி, தனிப்பட்ட தேவைகளின் அடிப்படையில் முடிவுகளை எடுத்துச் செயற்பட்டு வருகின்றார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை முதலில் நடத்துவது ஜனாதிபதியின் பொறுப்பாகும். இவ்வாறு மக்கள் ஆணையை உரசிப் பார்க்க வாய்ப்பு கிடைக்குமாயின், கிடைக்கும் மக்கள் ஆணையின் கீழ் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி தயார்.” – என்றார்.

### நமக்காகப் போராடியவர்களை...

எங்களுக்கு வேறு வழி இருக்கவில்லை.

நாம் அந்தச் சிந்தனையில் இப்போது இல்லை. ஐக்கியப்பட்ட, பிளவுபடாத, பிரிக்கப்படாத, ஒன்றுபட்ட நாட்டுக்குள் சேர்ந்து வாழ்வதற்கு நாங்கள் இன்னும் தயாராகவே இருக்கின்றோம் என்பதை நாம் மிகத் தெளிவாக வெளிப்படுத்தி இருக்கின்றோம். அதற்கு உங்கள் பிரதிபலிப்பு எப்படி இருந்தது? எப்படி இருக்கின்றது? முடிவு உங்களின் கைகளில். நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். எங்களை எப்போதும் இப்படி தனித்து நீங்கள் ஒதுக்கி விட முடியாது.

எங்களுக்காகப் போராடியவர்களின் மறைவை அவர்களின் உறவுகள் வடக்கு, கிழக்கில் நினைவு கூரும் இச்சமயத்தில், எங்களை நீங்கள் ஒதுக்கித் தள்ளி விட முடியாது என்பதை மீண்டும் குறிப்பிடுகின்றேன்.

அதிக எண்ணிக்கை உங்கள் பக்கம் இருப்பதால் மட்டும் உங்கள் கருத்து சரி என்று ஆகிவிடாது. அத்தகைய அதிக எண்ணிக்கை பல சமயங்களில் உங்களைத் தவறானவர்களாக – பிழையானவர்களாகச் செயற்பட வைத்து விடும்.

நீங்கள் உங்கள் எண்ணிக்கையை வைத்து எங்களை முற்றாக அழித்து விடலாம் என்று நினைக்கின்றீர்கள். அதைத்தான் இந்தச் சபையிலும் கூட நீங்கள் செய்கின்றீர்கள்.” – என்றார்.

# வட்டு. இளைஞன் மரணம் தொடர்பில் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்

## தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி. நாடாளுமன்றில் தெரிவிப்பு



வட்டுக்கோட்டை இளைஞன் மரணம் தொடர்பில் அரசு கவனம் எடுக்க வேண்டும். முக்கியமாகப் பாதுகாப்பு அமைச்சர் இதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். ஜனாதிபதி இதில் தலையிட்டு நிச்சயமாக உடனடியான ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி. நேற்று நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் தெரிவிக்கையில்–

வட்டுக்கோட்டை பகுதியிலே நடந்திருக்கக் கூடிய இறப்பு தொடர்பான ஒரு விடயத்தை இந்த சபையிலே கூறுவதற்கு நான் விளைகிறேன்.

வட்டக்கோட்டையில் நாகராஜா அலெக்ஸ் என்ற 28 வயதான ஒரு இளைஞர் சித்தங்கேணி பகுதியில் வட்டுக்கோட்டைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். அவரை 8 ஆம் திகதி பிடித்தவர்கள் பின்பு 12 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினார்கள்.

அவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்படி நீதிபதி கட்டளையிட்டு 12 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதிவரையும் அவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். பின்பு அவர் வைத்தியசாலையால் விடுவிக்கப்பட்ட பின்பு அவரை யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் கொண்டு போய் வைத்தார்கள்.

மீண்டும் அவர் 19 ஆம் திகதி நோய்வாய்ப்பட்டு விட்டார் என்ற காரணத்தால் மீண்டும் வைத்தியசாலைக்கு கொண்டு வந்த போது, வைத்தியசாலைக்கு வந்து ஒரு மணித்தியாலத்தில் அவர் இறந்துவிட்டார்.

அவரை பிரேத பரிசோதனை செய்த வைத்திய அதிகாரி மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார், அது ஒரு இயற்கை மரணமல்ல, அவருக்கு கிட்னியில் பிரச்சினை, அடித்த காயத்தால் ஏற்பட்டது. பல அடிகாயங்கள் இருக்கின்றன. ஆகவேதான் அவர் இறந்திருக்கிறார் என்று சொல்லியிருக்கின்றார்.

இதன் காரணமாக இரண்டு பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். இந்த இடமாற்றம் எனபது, சாதாரணமாகத் தமிழ் பகுதிகளில் இப்படியான நிலை மைகள் நடந்துவிட்டால் இடமாற்று வதும் அதை மறந்து விடுவதும் தொடர்ந்து வருகின்றது.

இதற்கு ஒரு சரியான விசாரணை வைக்கப்பட்டு அந்த குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டாலே யொழிய இப்படி யான நிலைமைகளை ஒரு போதும் திருத்த முடியாது. நிறுத்த முடியாது.

இது தொடர்பில் அரசு கவனம் எடுக்க வேண்டும். முக்கியமாகப் பாதுகாப்பு அமைச்சர் இதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

ஜனாதிபதி இதில் தலையிட்டு நிச்சயமாக உடனடியான ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அந்த குடும்பம் மிக வறிய குடும்பம். அவரை முதலில் மரம் கடத்துகிறார் என்று பிடிக்கப்பட்டது. இப்போது களவு என்று பொலிஸார் சொல்கிறார்கள். இப்படியான விடயங்கள் அங்கு நடந்து கொண்டிருக்கின்றன. – என்றார்.

# பண்டாரநாயக்க சரக்கு முனையத்தில் ஹெரோயின் போதைப் பொதிகள் மீட்பு!

## 270 மில்லியன் ரூபா பெறுமதியானதாம்!!



கட்டுநாயக்க – பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் சரக்கு முனையத்தில் 10.5 கிலோகிராம் ஹெரோயின் போதைப் பொருள் அடங்கிய 8 பொதிகள் மீடகப்பட்டுள்ளன.

இலங்கை சுங்க போதைப் பொருள் கட்டுப்பாட்டு பிரிவு மற்றும் விமான சரக்கு முனைய சுங்க அலுவலகம் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் போதே இது மீடகப்பட்டுள்ளது.

நேற்று மாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பு நடவடிக்கையின் போதே இந்த போதைப்பொருள் மீடகப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானின் லாகூரில் இருந்து இலங்கைக்கு விமானம் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட துவாயில் மறைத்து வைத்து இந்தப் போதைப் பொருள் கடத்தப்பட்டுள்ளது.

இது 270 மில்லியன் ரூபா பெறுமதியானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திஹாரி பிரதேசத்தில் உள்ள முகவரியில் பதிவு செய்யப்பட்ட வர்த்தக நிலையம் ஒன்றின் பெயரில் இறக்குமதி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், சரக்குகளை விடுவிக்க வந்த இறக்குமதியாளர் மற்றும் முகவர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மூவரும் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணிலின் தேர்தல் பசப்புரை

பெரும்பான்மையினரின் முடிவே - தீர்ப்பே - இறுதியானது என்று வெறும் அட்சரகணித எண்ணிக்கையின் அடிப்படையில் தீர்மானங்களை எடுக்கும் ஜனநாயக முறைமையே ஆட்சி கட்டமைப்பு வரிசையில் உயர்வானது, சிறந்தது என்று உலகம் போற்றுகின்றது.

அந்த ஜனநாயக முறைமையில் அதற்கு உயிரோட்டம் தருவதாக அமைவது சுதந்திரமான, சுயாதீனமான, நீதியான தேர்தல்கள் ஆகும்.

உரிய காலத்தில், உரிய முறைமைகளின் கீழ், நீதியாக, நடுநிலையாக நடத்தப்படும் தேர்தல்கள் இல்லாவிட்டால் ஜனநாயகம் வெறும் உயிரற்ற சடம்தான்.

உயிரற்ற உடம்பு, நாறி, அழுகி, அழிந்து போவது போல உரிய காலத்தில், சரியான விதிமுறைகளுக்கு அமைய தேர்தல்கள் நடத்தப்படாவிட்டால் அந்த அரசியல் கட்டமைப்பும் ஜனநாயகச் செழுமை இழந்து, எதேச்சாதிகார ஆட்சி முறைமையாகிவிடும்.

ஜனநாயகம் ஒழுங்காக நிலைபெற வேண்டும் என்றால், தேர்தல்கள் அதததற்குரிய காலங்களில், பிற தலையீடுகளின்றி, சுயாதீனமாக, சுதந்திரமாக நடத்தப்பட வேண்டும்.

இலங்கையின் சட்டங்கள் அப்படி ஜனநாயக விழுமியங்களை வலியுறுத்தினாலும், நடைமுறையில் அப்படி இடம்பெறுவதில்லை.

ஆட்சிப் பீடத்தில் இருப்பவரின் விருப்பு - வெறுப்புக்கும், தேவைக்கும், சுயநல அரசியல் வாய்ப்புக்கும் ஏற்பவே தேர்தல்கள் நடத்தப்படுகின்றன.

இதுவே இலங்கையில் ஜனநாயகச் சீரழிவுக்கான பிரதான அடிப்படையாகும்.

ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள், தங்கள் அதிகாரங்களின் மூலமும், சட்டவாக்கல் துறையான நாடாளுமன்றத்தில் தாம் நடத்தும் திருகுதாள நடவடிக்கைகள் மூலமும், சட்டங்களை அவ்வப்போது தமக்கேற்ப வளைத்து, தம்மிஷ்டப்படி தேர்தல் நடத்தும் விவகாரத்தைப் பந்தாடுகின்றமையை நாம் கண்டு வருகின்றோம்.

இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதற்கு விதிவிலக்கல்லர். இந்த விடயத்தில் நரி தந்திரம் மிக்க அசகாய சூரர் அவர்.

வழமையாகவே மக்கள் தீர்ப்பு என்ற தேர்தல்களைக் கண்டு தொடை நடுங்குபவர் என்று பெயர் எடுத்தவர் அவர்.

இப்போது தேர்தல்களைப் பற்றி நாடாளுமன்றத்தில் அவர் பேசியிருக்கின்றார்.

“ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் ஆகியன அடுத்த வருடம் நிச்சயம் நடக்கும். அதன் பின்னர் ஏனைய தேர்தல்கள் நடத்தப்படும்” - என்று அவர் திருவாய் மலர்ந்து அருளியிருக்கின்றார்.

மாகாண சபைத் தேர்தல்கள் ஐந்து வருடங்களாக நிலுவையில் இருக்கின்றன.

உள்ளூராட்சித் தேர்தல்கள் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இவ்வாண்டின் ஆரம்பத்தில் நடக்க இருக்கையில், நிதி அமைச்சர் என்ற முறையில் தமக்கு இருக்கும் அதிகாரங்களை வைத்து அதற்கு ஆப்படித்தவர் ரணில் விக்கிரமசிங்கதான். இந்த ஜனநாயக மீறலுக்காக என்றோ ஒரு நாள் சட்டத்தின் முன் அவர் நிற்க வேண்டி வரும் என்பது வேறு விடயம்.

இந்த இரண்டு தேர்தல்களுக்கும் சாவு மணி அடித்த அவர், இப்போது ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் குறித்துப் பேசுகின்றார்.

ஜனாதிபதித் தேர்தலை அவர் தலைகீழாக நின்றாலும் கூடத் தள்ளிப் போட முடியாது. அதற்கு அவருக்கு அதிகாரம் கிடையாது. மக்கள் அத்தகைய முயற்சியை வெறுமனே பார்த்திருக்கவும் மாட்டார்கள். அவர் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஒக்டோபருக்கு முன் நடத்தப்பட்டே தீரும்.

நாடாளுமன்றத் தேர்தல் அடுத்த ஆண்டில் நடத்தப்பட வேண்டிய நிலுவையில் இல்லை. அது காலக்கிரமப்படி 2025 இல்தான் இடம் பெற வேண்டும். ஆனால் இப்போது ஜனாதிபதி என்ற பதவியில் இருக்கும் ரணிலோ அல்லது அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வென்று அதிகாரத்துக்கு வருபவரோ (அது மீளவும் ரணிலாகவும் இருக்கலாம்) நினைத்தால் அடுத்த ஆண்டில் ஏதேனும் ஒரு காலப்பகுதியில் பொதுத் தேர்தலை நடத்தலாம். அதற்கு அப்பதவியில் இருப்பவருக்கு அதிகாரம் உண்டு.

நீண்ட காலமாக நிலுவையில் இருக்கும் - இனியும் தாமதிக்கப்படாமல் விரைந்து நடத்தப்பட வேண்டிய - தேர்தல்களை முடக்கி விட்டு, அடுத்த வருடத்தில் நடத்தப்பட வேண்டிய தேர்தல்கள் பற்றி பசப்புகின்றார் தேர்தல்களைக் கண்டால் தொடை நடுங்கும் இந்த அரசியல் அசகாய சூரர்.

# போலி ஐயாயிரம் நாணயத் தாள்களுடன் 28 வயதான நபர் பொலிஸாரால் கைது!

போலி ஐயாயிரம் ரூபா நாணயத் தாள்களுடன் நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பியகம பிரதேசத்தில் வைத்து அந்த நபரைக் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அந்த நபர் பல்கலைக்கழகம் ஒன்றின் வெளிவாரி கற்கை நெறியைக் கற்கும் நபர் என்று விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. இந்த நபரிடம் இருந்து 65 போலி 5000 ரூபா நாணயத்தாள்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேக நபர் கடந்த 2021 ஆம் ஆண்டு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தின் வெளிவாரி பட்டக் கற்கை நெறிக்காக பதிவு செய்து கொண்டவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொல்பித்திகம, ஹத்போக்குன பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை - 2023

“நாகரிகத்தின் வேர் காடுகள்தான். கூட்டங்களில் இருந்து விலகியிருந்து மரங் களுடன், ஆறுகளுடன், ஏரிகளுடன் ஒன்றாய்க் கலந்திருந்த மனிதர்களிடம் இருந்துதான் தலைசிறந்த கருத்துகள் வந்துள்ளன. காடுகளின் அமைதி மனிதனின் அறிவாற்றல் பெருக உதவியுள்ளது.”

இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)

# மிருகத்தனமாக செயற்பட்ட பொலிஸார் உடனடியாகத் தண்டிக்கப்பட வேண்டும்

## அங்கஜன் இராமநாதன் எம்.பி. கண்டனம்

(த.சுபேசன்)

மனித உரிமைகளை மதிக்காது மிருகத்தனமாக செயற்பட்ட யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையப் பொலிஸார் உடனடியாக தண்டிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலால் இளைஞன் ஒருவர் உயிரிழந்த நிலையில் அது தொடர்பாக வெளியிட்ட கண்டன அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

சித்தங்கேணியைச் சேர்ந்த 26 வயதான நாகராசா அலெக்ஸ் என்ற இளைஞன் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். இவ்வாறான பொலிஸாரின் காட்டு மிராண்டித்தனமான செயற்பாடுகள் யாழ். மாவட்டத்தில் இடம்பெறுவது இதுவே முதல் தடவை அல்ல. ஆனால் இதுவே இறுதிச் சம்பவமாக இருக்க வேண்டும்.

சந்தேக நபர்களை தாக்கும் அதிகாரம் பொலிஸாருக்கு இல்லை. இறுதி



முடிவெடுக்கும் அதிகாரம் நீதிமன்றங்களுக்கே உண்டு. ஆனால் இங்கு பொலிஸார் சந்தேக நபர்களை வலுக்கட்டாயமாக குற்றவாளிகளாக்கி விடுகின்றார்கள்.

சந்தேக நபர்களை மனிதராக மதிப்பதுமில்லை. மனித உரிமைகளை மதிக்கத் தெரியாத பொலிஸார் எந்தத் தருணத்திலும் பொலிஸாராக இருக்கத் தகுதியற்றவர்கள்.

வட்டுக்கோட்டைப் பொலிஸார் கைது செய்த இளைஞனை பொலிஸ் காவலரனில் வெளிப்படையாக காட்சிப்படுத்தவில்லை, இளைஞனின் குடும்பத்தாரிடம் இளைஞனை வெளிப்படுத்தவில்லை, எல்லாவற்றுக்கும் மேலாக 24மணித்தியாலங்களுக்குள் நீதிமன்றில் முற்படுத்த வேண்டிய சந்தேக நபரை நான்கு தினங்கள் பிரத்தியேக மறைவிடம் ஒன்றில் வைத்து உணவு கொடுக்காது மிருகத்தனமாகத் தாக்கியுள்ளனர்.

இளைஞனது மரணத்துக்கு வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சகல பொலிஸாரும் பொறுப்புக் கூற வேண்டும்.

உடனடியாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் இளைஞனது மரணத்துடன் தொடர்புபட்ட பொலிஸார் அனைவரது பதவிகளும் பறிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு பக்கச்சார்பற்ற விசாரணை இடம்பெற்று, தண்டனை வழங்கப்பட வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான பொலிஸ் நிலையங்களில் சந்தேக நபர்களை மறைத்து வைத்து தாக்கி தமது வாக்கு மூலங்களை திணிப்பதற்கான பிரத்தியேக இடங்கள் இருப்பதை அறிய முடிகிறது.

மனித உரிமைகளை பேணும் நிறுவனங்கள் பலவும் செயற்பட்டு வரும் நிலையில் பொலிஸாரின் இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகளுக்கு ஒரு போதும் இடமளிக்க முடியாது.

உயிரிழந்த இளைஞனது குடும்பத்துக்கு நீதி கிடைக்க வேண்டிய அதே நேரம் இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும்.– என்றுள்ளது.



# தேசிய மட்டத்தில் மூன்றாம் இடம்

(ஹஸ்பர்)

அகில இலங்கை அழகியல் நடனப் போட்டியில் தேசிய மட்டத்தில் திருகோணமலை கப்பல்துறை சரஸ்வதி வித்தியாலய மாணவர்கள் தப்பு நடனத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளனர்.

அனுராதபுர மத்தியக் கல்லூரியில் இடம் பெற்ற தேசிய மட்ட அழகியல் நடனத்தில் மூன்றாம் இடம் பெற்று சாதனை படைத்துள்ளனர்.


இவர்களை நெறிப்படுத்திய நடன ஆசிரியை திருமதி. யசோதினி குகாந்தன் இந்த நடனத்தின் பாடல் ஆக்கம், இசையமைப்பு ஆசிரியர் இதயநேசன் , வாத்தியங்களை இசைத்த லோகிசன் மற்றும் வித்தியாலய அதிபர் திருமதி. தவவாசுகி ரமணன் ஆகியோரை கல்விச் சமூகம் பாராட்டியுள்ளது.



# கொழுந்து நாட்டியப் போட்டியில் வட்டு இந்துக்கல்லூரி சாதனை!

தேசிய ரீதியில் நடத்தப்பட்ட பரத நாட் டியப் போட்டி 2023 இல் வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரி மாணவர்கள் சிரேஷ்ட பிரிவில் குழு 01 பெண்களுக் கான தேயிலை கொழுந்து நடனத்தில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளனர்.

அந்த மாணவர்களுக்கும் மாணவர் களை வழிப்படுத்திப் பல வகையிலும் ஊக்கமளித்து துணை புரிந்த நடன ஆசிரியர் திருமதி சகிலா சுதாகரன், சங்கீத ஆசிரியர் திருமதி நித்தியா தவக்குமார், விஞ்ஞான ஆசிரியர் திரு சின்னப்பு சதீஸ், பக்கவாத்தியக்கலைஞர் லோ.நிமலன் மற்றும் பல்வேறு வழிக ளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் பாடசாலை சமூகத் தினர் பாராட்டி வாழ்த்துக்களை தெரி வித்துக் கொள்கின்றனர். இந்தத் தேசிய மட்ட போட்டியில் பங்குபற்றுவதற்கான நிதி உதவிகளை லண்டன் ரட்ணம் நிதியத்தைச் சேர்ந்த கலாநிதி இ.நித் தியானந்தன் வழங்கியமை குறிப்பிடத் தக்கது.



# தமிழ்த்தினப் போட்டியில் சாதனை; மாணவன் பாராட்டிக் கௌரவிப்பு!

**(பழுவூரான்)**

அகில இலங்கை தமிழ் மொழி தினப் போட்டியில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட முதலைக்குடா கனிஷ்ட வித்தியாலய மாணவன் முதலி டத்தைப் பெற்று சாதனை புரிந்துள் ளார்.

அண்மையில் நடைபெற்ற தமிழ் மொழித் தினப் போட்டியின் பாவோதல் நிகழ்ச்சியில் முதலாம் பிரிவில் தோற்றிய சு.சதுரிகன் என்ற மாணவனே தேசியமட் டத்தில் முதலிடத்தைப் பெற்றுள் ளார்.

மாணவனைப் பாராட்டிக் கௌரவிக் கும் நிகழ்வில் மண்முனை மேற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் யோ.ஜெயச் சந்திரன், கோட்டக் கல்விப் பணிப்பாளர்க ளான அ.ஜெயக்குமணன், மூ.உதயகு மாரன், ஆசிரிய ஆலோசகர்களான பு.சதீஸ்குமார், கோகுலதீபன் ஆகியோ ரும் கலந்து கொண்டனர்.

# நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் 9 மாவட்டங்களில் மண் சரிவு அபாயம்!



நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 9 மாவட்டங்களுக்கு இன்றிரவு (22) 8 மணிவரையில் மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் விடுத்துள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பதுளை, கண்டி, மாத்தளை, கேகாலை, இரத்தினபுரி, கம்பஹா, குருநாகல், ஹம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பதுளை மாவட்டத்தின் ஒஹியவுக்கும் இந்தல்கஸ் ஹின்னவுக்கும் இடையில் ரயில் தண்டவாளத்தில் மண் மேடு சரிந்து வீழ்ந்தமையால் மலையக பகுதிக்கான தொடருந்து போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

அத்துடன் கண்டி மாவட்டத்தின் பேராதனை நகரில் உள்ள பாலத்துக்கு அருகில் ஏற்பட்ட மண்சரிவில் ஒருவர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மன்னாரில் இடம்பெற்ற சர்வதேச மீனவர் நிகழ்வு

**(மன்னார் நிருபர்)**

'கடல்சார் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் அமைப்புக்களின் முதன்மையினைப் புரிந்து கொள்வதும், உலகின் மீன் வளத்தை எதிர்கால சந்ததிக்குமாய் உறுதி செய்வதும்' எனும் தொனிப்பொருளில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் (மெசிடோ) ஏற்பாடு செய்த சர்வதேச மீனவர் தின நிகழ்வு நேற்று (21) செவ்வாய்க்கிழமை மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.



மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்கள உதவிப் பணிப்பாளர் விஸ்வலிங்கம் கலிஸ்ரன் கலந்து கொண்டார்.

இதன் போது பெண்களால் பல்வேறு நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன.

நிகழ்வில் மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் பல நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மெசிடோ நிறுவனப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.





# அச்சுவேலி மத்தி மாணவர்களுக்கு சின்னம் சூட்டல்

அச்சுவேலி மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர்களுக்குச் சின்னம் சூட்டும் வைபவம் இன்று பாடசாலை முதல்வர் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக உதவிக் கல்வி பணிப்பாளர் ப. சுரேந்திரன் கலந்துகொண்டார்.



# குச்சவெளி பிரதேசத்துக்கு உட்பட்ட பஸ் தரிப்பிடங்களில் சுத்திகரிப்பு

## முரசு பத்திரிகையில் வந்த செய்திக்கு உடன் நடவடிக்கை





(அபு அலா)

திருகோணமலை மாவட்ட கோபாலபுரம் ஆயுள்வேத வைத்தியசாலைக்கு முன்பாக அமைந்துள்ள பஸ் தரிப்பிடம் கடந்த பல மாதங்களாக யாரும் கவனிப்பாரற்ற நிலைமையில் காணப்பட்டு வந்தது தொடர்பில், முரசு பத்திரிகையில் வெளியான செய்தியை அடுத்து குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து பஸ் தரிப்பிடங்களும் சுத்தம் செய்யப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில், கடந்த வாரம் வெளியான செய்தி பற்றி, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இதனை அடுத்துக் குச்சவெளி பிரதேச சபைக்கு உட்பட்ட அனைத்து பஸ் தரிப்பிடங்களும் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களும் சுத்தம் செய்யப்பட வேண்டும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் விடுத்த உத்தரவுக்கமைவாகவே இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.



# கிழக்கு மாகாணத்தில் ஓட்டிசம் பிரிவு திறப்பு!

(அபு அலா)

கிழக்கு மாகாணத்தில் முதல் முறையாக சுதேச மருத்துவத்துறையில் ஓட்டிசப் பிரிவு ஒன்று, நிந்தவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையில் (19) கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் திறந்துவைக்கப் பட்டுள்ளது.

கல்முனைப் பிராந்திய ஆயுள்வேத இணைப்பாளரும், நிந்தவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான வைத்தியர் எம்.ஏ.நபீல்தலைமையில் இடம்பெற்ற இந்தத் திறப்பு விழாவுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்ட மான் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

கிழக்கு மாகாண பி.எஸ்.டி.ஜி. நிதியின் கீழ் சுமார் 18.5 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஓட்டிசம் பிரிவு மற்றும் பக்கவாப் பிரிவு போன்ற இரு பிரிவுகளையும் திறந்து வைத்த ஆளுநர், அங்குள்ள சிறுவர்களுக்கு சுதேச மருத்துவ திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட ஆயுள்வேத சத்துமா பிஸ்கட்களை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், நிந்தவூர் பிரதேச செயலர் ஏ.எம்.அப்துல் லத்தீப் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள திட்டமிடல் பிரிவு வைத்தியர் எம்.வர்மேந்திரன், அட்டாளைச்சேனை தள ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ஐ.எல்.அப்துல் ஹை, கல்முனை பிராந்திய ஆயுள்வேத வைத்தியசாலைகளின் வைத்தியப் பொறுப்பதிகாரிகள், வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.





# 4 எஸ் சங்கத்தின் மாநாடு கொழும்பில்



4 எஸ் சங்கத்தின் 12 ஆவது தேசிய மாநாடு கொழும்பில் அதன் தலைமையகத்தில் (18) தலைவர் அஷ்ரப் சிஹாப்தீன் தலைமையில் எஸ்.எம்.எவ்.சி. ஏற்பாட்டில் நடைபெற்றது.

அதன்போது எதிர்வரும் ஆண்டுகளில் சங்கத்தால் செய்யப்படவுள்ள சமூக சேவைகள், இலக்கிய சேவைகள் சம்பந்தமாக விரிவாக ஆராயப்பட்டது.

கடந்த ஆண்டுகளில் சிறப்பாகத் தமது பங்களிப்பை வழங்கிய டாக்டர் முனீர் மற்றும் அப்துல்லாஹ் ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதுடன் புதிய உறுப்பினர்களும் இணைக்கப்பட்டனர்.

சங்கத்தின் செயலாளர் ராபி ஷரீப்தீன், துணை தலைவர் கவிஞர் ராஷ்க், துணைச் செயலாளர் அபூரஸா மற்றும் பொருளாளர் இம்ரான் நெய்னார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PIKUP & DROPING
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
BEST FOR
VAN RENT
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882

# மேய்ச்சல் தரவைகள் இன்மையால் தம்பலகாமம் பண்ணையாளர் சிரமம்

(எஸ்.கீதபொன்கலன் )

கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வரும் தம்பலகாமம் பகுதியைச் சேர்ந்த பண்ணையாளர்கள் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை இன்றி பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

திருகோணமலை தம்பலகாமம் பகுதியில் 45 இற்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட பண்ணையாளர்கள் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் தங்கள் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை இன்றி தங்களுடைய கால்நடைகளைக் கோடை காலங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்படாத தம்பலகாமம் மற்றும் தம்பலகாமத்தை அண்மித்துள்ள பகுதிகளில் உள்ள இடங்களில் மேய்ச்சலுக்கு விட்டு வந்தனர்.

அந்த நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் நவம்பர் மாதம் தொடக்கம் தைப்பொங்கல் வரையான 75 நாள்களுக்கு தம்பலகாமத்தில் இருந்து 58 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மொரவெவ குளத்தை அண்மித்துள்ள பகுதிக்குக் கால் நடைகளைக் கொண்டு சென்றுள்ளனர்.

இந்த நிலையில் கடந்த 13 ஆம் திகதி அதிகாலை மொரவெவ பகுதியைச் சேர்ந்த சிலரால் தம்பலகாமத்தைச் சேர்ந்த சில பண்ணையாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் தங்கியிருந்த கூடாரங்களும் சேதப்படுத்தப்பட்டு அவர்கள் வைத்திருந்த உணவுப் பொருள்களினுள் மண்ணெண்ணெய் ஊற்றப்பட்டது என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இப்பகுதியில் கால்நடைகளை வைத்திருப்பதற்காக சிலர் தம்மிடம் 15 லட்சம் ரூபா கப்பம் பெற்றுவந்ததாகவும் இந்த முறை அதை வழங்கவில்லை எனவும் கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இவ்வாறான நிலை தொடருமானால் கால்நடை வளர்ப்பைக் கைவிட வேண்டிய நிலைமை ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பண்ணையாளர்களின் கால்நடை வளர்ப்புக்கான மேய்ச்சல் தரைகளை வழங்குவதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.





# மூளாயில் உலக நீரிழிவு தின நிகழ்வு

உலக நீரிழிவு தினமானது மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் (19) நீரிழிவு நிலையத்தில் அ.நித்தியானந்த மனுநீதி தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கா.பார்த்தீபன், அ.கிருஸ்ணமூர்த்தி, செ.கெங்கதாரன், பேராசிரியர் வைத்திய கலாநிதி இ.சுரேந்திரகுமாரன், வைத்திய அத்தியட்சகர் எஸ். ஸ்ரீபவானந்தராஜா, வைத்தியப் பணிப்பாளர் என். ஜெயக்குமார், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி மு.நவரட்ணராஜா, வைத்திய அதிகாரி எஸ். கிரிதரன், தாதிய பரிபாலகர் செல்வி.கி.கயறுாபி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# இலக்கியத் துறைக்கான இலக்கிய வித்தகர் விருது!

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வருடா வருடம் நடத்தப்பட்டுவரும் இலக்கிய விழாவில் கலைஞர்கள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றனர்.

அந்தவகையில் 2023 ஆம் ஆண்டுக்கான இலக்கிய வித்தகர் விருதுகளுக்காகத் தெரிவு செய்யப்பட்டவர்களில் சம்பூர், திருகோணமலையைச் சேர்ந்த கவிஞர் கனகசூரியம் யோகானந்தன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஓய்வுபெற்ற அதிபரான கனகசூரியம் யோகானந்தன் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இலக்கியப் பணிபுரிந்து வருகிறார். இதுவரை ஐந்து கவிதை நூல்களை எழுதியுள்ளார்.

2006 கவிதை நூலுக்கான சாஹித்திய மண்டலப் பரிசைப் பெற்றுள்ளார். 2019 இல் கவிதை நூலுக்கு “பிரமிள்” விருதையும் நகரமுதல்வர் விருதும் பெற்றுள்ளார்.








# கற்றல் உபகரணங்கள், பாதணிகளை வழங்கிய இணைந்த கரங்கள் அமைப்பு

(நூருல் ஹுதா உமர் )

திருகோணமலை மாவட்ட, மூதூர் கல்வி வலயத்தில் உள்ள லிங்கபுரம் சரஸ்வதி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் அதி கஷ்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இணைந்த கரங்கள் அமைப்பால் கற்றல் உபகர ணங்கள், பாதணி மற்றும் புத்தகப்பை வழங்கப்பட்டுள்ளன.

நிகழ்வு பாடசாலை அதிபர் தாமோ தரம்பிள்ளை சதீஸ்வரன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நேற்று (20) இடம்பெற்றது.

இந்தப் பாடசாலையானது 1985 உள்நாட்டு கலவர காலப் பகுதி அதனைத் தொடர்ந்து யுத்த காலப் பகுதியிலும் பாதிப்புக்கு உள்ளான பாடசாலையாகும்.

இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான லோ.கஜருபன், சி.காந்தன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உப கரணங்கள், பாதணி மற்றும் புத்த கப்பை என்பனவற்றை வழங்கி வைத் தனர்.

இந்நிகழ்வில் மூதூர் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எம். முசம்மில், ஆசிரிய ஆலோசகர் என். எம். கலிலூர் ரகுமான், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.





# யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு தேசிய மட்டத்தில் 6 தங்கங்கள்!

தேசிய மட்ட போட்டிகளில் 6 தங்கப் பத்கங்களை வென்று, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி சாதனை படைத் துள்ளது.

தேசிய மட்டப் போட்டிகள் அனுராத புரத்தில் நடைபெற்றன. இதில் பாரதி தாசன் பாடல் (தனி நடனம்) – முதலாம் இடம், கவணாடல் (கிராமியம்) குழு நட னம் – முதலாம் இடம், போதை ஒழிப்பு (செந்நெறி) குழு நடனம் – முதலாம் இடம், வில்லிசை – முதலாம் இடம், தனி இசை – முதலாம் இடம், வீணை வாசித் தல் (தனி) – முதலாம் இடம், கிராமியப் பாடல் (குழு இசை)– 2 ஆம் இடம் ஆகிய இடங்களைப் பெற்றுள்ளது.




# சவூதியில் சித்திரவதைக்குட்பட்ட இலங்கைப் பெண் நாடு திரும்பினார்




சவூதி அரேபியாவுக்கு வீட்டு வேலைக்காகச் சென்ற வீட்டுப் பணிப் பெண் ஒருவர் மிக மோசமான முறையில் சித்திரவதைக்குட்படுத்தப்பட்ட நிலையில் மீண்டும் நாடு திரும்பியுள்ளார்.

மத்துகம பிரதேசத்தை சேர்ந்த ராமச்சந்திரன் தர்ஷனி என்ற 32 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு நாடு திரும்பியுள்ளார்.

இன்று அதிகாலை 04.25 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது–

கடந்த 9 ஆம் மாதம் 17ஆம் திகதி அரேபியாவில் உள்ள மதீனாவில் உள்ள ஒரு வீட்டுக்கு வீட்டு வேலை செய்ய சென்றேன்.

ஏற்கனவே அங்கு பணியாற்றிய பெண் அங்கிருந்து தப்பியோடியுள்ளார். அவரது பைகள் அந்த வீட்டில் இருந்ததைக் கண்டேன். அந்த வீட்டின் உரிமையாளரான பெண் எப்போதும் என்னை அடிப்பது, திட்டுவது, தீயில் சுடுவது போன்று சித்திரவதைகளைச் செய்தார். ஒரு முறை கீழே விழுந்து விட்டேன். அதனால் என்னால் வேலை செய்ய முடியவில்லை என கூறினேன்.

என்னை சலவை இயந்திர அறைக்கு இழுத்துச் சென்று அடித்து, தரையில் வீசினார். இரண்டு ஆணிகள் மற்றும் இரும்பு உருண்டையைக் கொடுத்து குடிக்குமாறு கூறினார்கள். குடிக்கவில்லை என்றால் என் தங்க நகைகளை திருடியதாக கூறி பொலிஸாரிடம் பிடித்துக் கொடுத்துவிடுவார் என்று மிரட்டினார்கள்.

நான் குடித்துவிட்டேன் அப்போது என் தொண்டையில் ஒரு ஆணி சிக்கிக் கொண்டது என்னால் சுவாசிக்க முடியவில்லை.

இது குறித்து இலங்கையில் உள்ள முகவர் நிலையத்துக்குத் தொலைபேசி மூலம் தெரியப்படுத்தினேன். அங்கிருந்த பெண் என்னை திட்டிவிட்டு, அந்த வீட்டிலேயே வேலை செய்யுமாறு கூறினார்.–என்றார்.

தர்ஷனியை அழைத்துச் செல்வதற்காக அவரது கணவர் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்துள்ளார். இவர் தேங்காய் உடைக்கும் தொழில் செய்து வருகிறார்.

எங்கள் வீட்டுக்கு அருகில் சவூதி அரேபியா தூதரகத்தில் பணிபுரியும் ஒருவர் இருக்கிறார். நான் அவரிடம் சென்று இது பற்றிச் சொன்னேன். அவர் தர்ஷனியை விரைவாக அழைத்து வர உதவினார் என்று அவரது கணவர் குறிப்பிட்டுள்ளார்.



# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் இளையோர் ஊக்குவிப்பு நிகழ்வு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

தேசியத்தில் ஒற்றுமையை கட்டியெழுப்பி எதிர்காலத்தில் வளமான எதிர்காலத்தை உருவாக்க இளைஞர்களை ஊக்கப்படுத்தும் வகையில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஸ்ரீ லங்கா யுனைட்ஸ் அமைப்பால் நிகழ்வு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

தென் கிழக்கு பல்கலைக்கழகத்துக்குப் புதிதாக தெரிவு செய்யப்பட்ட தொழில் நுட்ப பீட மாணவர்களின் பங்கு பற்றுதலுடன் மூன்று தினங்கள் இந்த பயிற்சிப் பாசறை இடம்பெற்றது.

தலைமைத்துவ பண்புகள், இனங்களுக்கிடையில் நல்லுறவை வலுப்படுத்தும் செயற்பாடுகள், ஏனைய சமயங்களின் கலை கலாசார விழுமியங்களை மதித்தல், நல்லொழுக்கம் போன்ற பலதுறைகளில் தொழில் நுட்ப பீடத்தைச் சேர்ந்த 186 மாணவர்கள் இதில் பங்குபற்றினர்.

# உத்தராகண்ட் சுரங்க விபத்து மீட்புப் பணிகளில் முன்னேற்றம்!

## - செங்குத்து துளையிடுவதற்கான இடம் அடையாளம்




உத்தராகண்ட் சுரங்கத்தினுள் சிக்கியுள்ள 41 தொழிலாளர்களை மீட்கும் பணிகள் 11 ஆவது நாளாக தொடர்ந்து வருகிறது.

இந்த நிலையில் செங்குத்து துளையிடுவதற்கான இடம் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்புப் பணிகள் குறித்து தன்னிடம் பிரதமர் மோடி விசாரித்துள்ளார் என மாநில முதல்வர் புஷ்கர் சிங் தாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தனது சமூகவலைத்தள பக்கத்தில் மாநில முதல்வர் தாமி இன்று வெளியிட்டுள்ள பதிவில்,

பிரதமர் மோடி இன்று தொலைப்பேசி வழியாக தொடர்பு கொண்டு உத்தரகாசி சுரங்கத்துக்குள் சிக்கியுள்ள தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உணவுகள், மருந்துகள் மற்றும் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு பணிகள் குறித்து விசாரித்தார்.

மத்திய நிறுவனங்கள், சர்வதேச நிபுணர்கள், மாவட்ட நிர்வாகம் போன்றவைகளின் ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு குறித்து தெரிவிக்கப்பட்டது. குறிப்பாக கடந்த 24 மணி நேரத்தில் மீட்புப் பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடுபத்தினர் மனதில் நம்பிக்கை குறித்து தெரிவிக்கப்பட்டது.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் பிரதமரிடமிருந்து எங்களுக்கு கிடைக்கும் ஆலோசானைகள் சுரங்கத்தில் சிக்கியுள்ள தொழிலாளர்களை மீட்கும் நடவடிக்கையில் புதிய உத்வேகத்தை தருகின்றன என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், தொழிலாளர்களைத் தொடர்ந்து உயிருடன் வைத்திருக்கும் பொருட்டுசிக்கியுள்ளதொழிலாளர்களுக்கு சூடான உணவுகள் கொடுக்கப்படுகின்றன.

செவ்வாய்க்கிழமை மாலையில் தொழிலாளர்களுக்கு உணவு கொடுக்கப்பட்டன. இதற்கிடையே, பி.ஆர்.ஓ. நிறுவனம் செவ்வாய்க்கிழமை சுரங்கத்துக்கு அருகே செல்ல பாதை அமைத்திருந்ததைத் தொடர்ந்து மீட்பு பணிகளில் புதன்கிழமை புதிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளன. செங்குத்து துளையிடுவதற்கான இடம் கண்ட றியப்பட்டுள்ளது.

இதுகுறித்து தேசிய நெடுஞ்சாலை மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சி கழகத்தின் இயக்குனர் அன்சூ மணீஷ் குல்கோ கூறுகையில்,

"செங்குத்தாக துளையிடுவதற்கான இடம் கண்டறியப்பட்டுள்ளது. செங்குத்து துளையிடுவதற்காக சுரங்கத்தின் உச்சிக்கு போடப்பட்ட சாலைப்பணிகள் கிட்டத்தட்ட நிறைவடைந்துள்ளன. சுமார் 350 மீட்டர் தூரம் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன" என்று தெரிவித்தார்.

இதனிடையே திங்கள்கிழமை மாலையில் மீட்புக்குழுவினர் 6 அங்குலம் குழாய் மூலமாக சிக்கியுள்ள தொழிலாளர்களுக்கு உணவுகள் வழங்கப்படுகின்றன.

அவர்களுக்கு வாழைப்பழம், மருந்துகள் மட்டுமே வழங்கப்பட்டு வந்தன. செவ்வாய்க்கிழமை மாலையில், அவர்களுக்கு உணவுகள் வழங்கப்பட்டன.

அதேபோல், சுரங்கத்துக்குள் எண்டோஸ்கோபி கெமரா அனுப்பப்பட்டு உள்ளே சிக்கியிருக்கும் தொழிலாளர்கள் முதல்முறையாக படம்பிடிக்கப்பட்டனர்.

# சேலம் அரசு மருத்துவமனையில் தீ விபத்து: அவசர பிரிவிலிருந்த நோயாளிகள் மீட்பு!

சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இன்று காலை எதிர்பாராத விதமாக தீ விபத்து ஏற்பட்டுள்ளது. துரிதமாக செயல்பட்ட தீயணைப்புத் துறையினர் தீயை கட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள அவசர சிகிச்சை பிரிவு அருகே மேல் மாடியில் உள்ள சத்திர சிகிச்சை கூடத்தில் அருகே உள்ள குளிரூட்டி இயந்திரத்தில் மின் கசிவு காரணமாக திடீர் தீ விபத்து ஏற்பட்டது. இதன் காரணமாக பெருமளவு புகைமூட்டம் எழுந்து அருகிலுள்ள அவசர சிகிச்சை விடுதி பகுதிகளில் பரவத் தொடங்கியது.

தீ விபத்து ஏற்பட்டதை அறிந்த மருத்துவமனை ஊழியர்களும், நோயாளிகளுடன் தங்கி இருந்தவர்களும் உடனடியாக நோயாளிகளை அவசர சிகிச்சை பிரிவு விடுதியில் இருந்து வெளியே கொண்டு வந்தனர்.



இதனிடையே மருத்துவமனை வளாகத்துக்கு அருகிலேயே உள்ள மருத்துவமனை வளாக பொலிஸாரும், செவ்வாய்பேட்டை தீயணைப்பு நிலையத்திலிருந்து தீயணைப்பு படை வீரர்களும் மருத்துவமனைக்குள் வந்து தீ , புகை மூட்டத்தை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

தகவல் அறிந்து மருத்துவமனை நிர்வாகத்தினர் தீ விபத்து ஏற்பட்ட பகுதியை ஆய்வு செய்தனர். காலை நேரம் என்பதால் அசம்பாவிதம் ஏதுமின்றி தீ விபத்து ஏற்பட்ட அவசர சிகிச்சை விடுதியில் இருந்த நோயாளிகள் உள்ளிட்ட அனைவரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

# பணயக் கைதிகளை விடுவிக்க ஏதுவாக காசாவில் 4 நாள்கள் போர் நிறுத்தம்!

## - இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவிப்பு








பணயக் கைதிகளை விடுவிக்க ஏதுவாக 4 நாள்களுக்கு போரை நிறுத்துவதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் குழுவினர் இஸ்ரேல் மீது திடீர் ஏவுகணைத் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் 1200 பேர் உயிரிழந்தனர். 200 இற்கும் மேற்பட்டோர் பணயக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டனர். இதனையடுத்து இஸ்ரேல் நடத்திய போரில் இதுவரை 13 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரழந்துள்ளனர். இந்தப் போர் 40 நாள்களைக் கடந்து இடம்பெற்று வருகிறது.

இந்த நிலையில் இஸ்ரேல் அரசு முதன்முறையாக காசாவில் 4 நாட்களுக்கு போர் நிறுத்தம் செய்வதாக அறிவித்துள்ளது. இந்தக் காலக்கட்டத்தில் குழந்தைகள், பெண்கள் உள்பட 50 பணயக் கைதிகளை ஹமாஸ் குழுவினர் விடுவிப்பார்கள் என்று இஸ்ரேல் அரசு அறிவித்துள்ளது.

இருப்பினும், இது போர் நிறுத்தம் இல்லை என்று பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெளிவுபடுத்தியுள்ளார். இது பணயக் கைதிகளை விடுவிப்பதற்கான ஒப்பந்தம் மட்டுமே. போர்க்கால அமைச்சரவை கூடி இந்த முடிவை எடுத்துள்ளது என்று அவர் கூறினார்.

மேலும் ஹமாஸ் அழியும் வரை போர் தொடரும். ஹமாஸை முழுவதுமாக அழித்து, பணயக் கைதிகள் அனைவரையும் விடுவித்து இஸ்ரேலை அச்சுறுத்தும் சக்தி ஏதும் காசாவில் இல்லை என்பதை உறுதி செய்வதே எங்களின் இலக்கு என்றும் பிரதமர் பெஞ்சமின் கூறியுள்ளார்.

முன்னதாக நேற்று, ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே, “இஸ்ரேலுடனான போர் நிறுத்த ஒப்பந்தம் இறுதிக்கட்டத்தை நெருங்கிவிட்டது” என டெலிகிராமில் தெரிவித்திருந்தார்.

இருதரப்புகளுக்கும் இடையே கட்டார் பேச்சு நடத்தி வரும் நிலையில், இரண்டு தரப்பிலும் சுமுக முடிவு விரையில் எட்டப்படலாம் என தகவல்கள் வெளியாகின.

இஸ்ரேல் 5 நாள் போர் நிறுத்தமும், தெற்கு காசா உட்பட காசாவின் பகுதிகளில் தரைவழி மற்றும் வான்வழி தாக்குதலை நிறுத்தவும் அந்த பேச்சுவார்த்தையில் கேட்கப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது.

இந்த நிலையில், இஸ்ரேல் காசாவில் 4 நாள்களுக்கு போர் நிறுத்தம் செய்ய உத்தரவிட்டுள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. ஐ.நா., உலக சுகாதார நிறுவனம், உலக நாடுகள் எனப் பல தரப்பிலும் முன்வக்கப்பட்ட கோரிக்கை தற்போது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

# உளவு செய்மதியை வெற்றிகரமாக விண்ணுக்கு ஏவியது வட கொரியா




இராணுவ உளவு செய்மதியை வெற்றிகரமாக விண்ணுக்கு ஏவியுள்ளதாக வட கொரியா அறிவித்துள்ளது.

மல்லிகியோங் -1 என பெயரிடப்பட்ட இந்த செய்மதி, துல்லியமாக சுற்றுவட்டப் பாதையில் பிரவேசித்து விட்டதாக வட கொரிய அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

வட கொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன், செய்மதியை விண்ணுக்கு செலுத்தும் நிகழ்வில் பங்கேற்றுள்ளார் என அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.